# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர். |
| திரு.சு.ரவிச்சந்திரன் பி.ஏ., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க..எண். 1838/2022/அ1** **நாள்: 30.07.2022**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் –கடையநல்லூர் நகராட்சி – ஜீலை–2022 மாதம் நகர்மன்ற கூட்டம் நடத்தப்பட்டது– கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பிவைத்தல்– சார்பாக.

**பார்வை.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3, நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் 29.07.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின், கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
29.07.2022 அன்று நடைபெற்ற
நகர்மன்றக்கூட்டத்தின் எடு குறிப்பு

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

## கடையநல்லூர் நகராட்சி

## 29.07.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டப்பொருள்கள் விவரம்.

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏவிஎம் சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த உத்தரவு ந.க.எண்.660/2018/எச்1 நாள்.02.04.2018ன்படி வழங்கப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கையின்படி புதிய அளவுகோலின்படி பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையின் மூலம் பணியமர்த்த ந.க.எண்.3587/2020/எச்1 நாள்.14.10.2020, 27.05.2021 மற்றும் 23.09.2021 தேதிய கடிதங்களின்படி அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை அனுமதி கிடைக்கப்பெறாததால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை.

எனவே பழைய ஒப்பந்த விகிதத்திலேயே பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வரப்படுவதால் பணியாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.

எனவே 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை R.O.C.No.M2/12587/2022 நாள்.30.06.2022ன்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் ரூ.478/– என நிர்ணயம் செய்து மற்றும் EPF + ESI + நிர்வாக செலவினம் முதலான இதர அரசால் அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கு உத்தேச செலவினம் 478x204x90 நாட்களுக்கு ரூ.87,76,080/– (ரூபாய் எண்பத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்தி எண்பது)க்கும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தூய்மை பணியினை மேற்கொள்ளும் வகைக்கு 3 மாத காலநீட்டிப்பு செய்யவும் தினக்கூலி பணியாளர்களுக்கு புதிய ஊதியம் நிர்ணயம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 660/2018/எச்1)**

**தீர்மானம் எண்:–117**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 28.11.2017ம் தேதிய ந.க.எண்.2517/2017/J1 மற்றும் 17.09.2018ம் தேதிய ந.க.எண்.13433/2018/J1 மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் சங்கரன்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.3179/13/அ6 நாள்.18.07.17 மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.ந15/1328/2017 நாள்.08.11.2017 கடிதங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து ஒவ்வொரு நகராட்சியிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள தனியாக DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கென தனியாக DBC பணியாளர்கள் நியமிக்கப்படாமல் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணிக்கென ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் நியமிக்கப்பட்டுள்ள 204 பணியாளர்களில் 110 பணியாளர்களை DBC பணிக்கென ஒதுக்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புது SWM அளவுகோல்களின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கும் பட்சத்தில் DBC பணிக்கென தனியாக ஆட்கள் நியமிக்க இயலாத நிலையில் நோய்த்தடுப்பு களப்பணிகள் முற்றிலும் நிறுத்தப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே கடையநல்லூர் நகராட்சி அடிக்கடி டெங்கு நோய் பாதிப்புக்குள்ளாக கூடிய பகுதி (Endemic zone) என்பதால் 300 குடியிருப்புகளுக்கு 1 DBC பணியாளர்கள் என்பதன் அடிப்படையில் கீழ்க்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 110 நபர்கள் |

மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.M2/12587/2022 நாள்.30.06.2022ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியம் ரூ.519/– என நிர்ணயம் செய்து மற்றும் EPF + ESI+ நிர்வாகம் மற்றும் இதர அரசால் அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு உத்தேச செலவினம் ரூ.907.97 இலட்சத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மூன்றாண்டுகளுக்கு வெளிக்கொணர்வு முகமை (Outsource ) மூலம் பணியமர்த்தி மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள முதன்மை அனுமதி வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட அனுமதியும் மேற்படி பணிகளுக்குரிய உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1711 /2022/எச்1)**

**தீர்மானம் எண்:–118**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.3**

கடையநல்லூர் நகராட்சி **30.06.2022** அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெரு நாய்களின் தொந்தரவுகள் அதிகமாக உள்ளதாகவும் இதனால் பள்ளிக்குழந்தைகள் உட்பட பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாவதால் பொதுமக்கள் நலன் கருதி சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து அப்புறப்படுத்திட நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்கள். மேலும் **29.03.2021** தேதிய கணக்கெடுப்பில் இந்நகராட்சி பகுதியில் மொத்தம் **459** தெரு நாய்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை முதற்கட்டமாக இந்நகராட்சி ஆணையாளரின் செயல்முறை ஆணை எண்.**1121/2021**/எச்**1** நாள்.**24.09.2021**ன்படி அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனமான ஜீவ காருண்ய விலங்கு நல சாரிட்டபிள் டிரஸ்ட், நாகர்கோவில் மூலம் **147** நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள நாய்களுக்கும் மேற்படி தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் கருத்தடை செய்தல் வெறிநாய் தடுப்பூசி போடுதல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு முன் / பின் பராமரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாணை எண்.**181**/ நாள்.**05.04.2013**ல் நிர்ணயித்துள்ள நாய் ஒன்றுக்கு ரூ.**700/–** வீதம் உத்தேச செலவுத் தொகை ரூ.**3,00,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1121/2021/எச்1)**

**தீர்மானம் எண்:–119**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

அரசாணை எண்.**166** மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**32050/2016**/ஜே**2** நாள்.**26.10.2017** கடிதங்களின்படி அரசு பள்ளி மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வகுப்பறைகள், உணவு அருந்தும் அறைகளை சுத்தம் செய்வது நகராட்சியின் கடமையாகும். மேலும் நகராட்சியில் வசூல் செய்யப்படும் கல்வி வரி (Education Cess) மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதி (SUC)களின் மூலம் பள்ளிகளில் உள்ள கழிவறைகள், வகுப்பறைகள், உணவு அருந்தும் அறைகள் மற்றும் வளாகங்களில் உள்ள புல் புதர்களை அகற்றி சுத்தம் செய்திட ஆண்கள் மட்டும் பயிலும் பள்ளிகளுக்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண் தூய்மை

பணியாளர்கள் மற்றும் ஒரு துப்புரவாளர். மேலும் பெண்கள் மட்டும் பயிலும் பள்ளிகளுக்கு இரண்டு பெண் தூய்மை பணியாளர் மற்றும் ஒரு துப்புரவாளர் என அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே கடையநல்லூர் நகராட்சியில் உள்ள ஒரு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒரு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு நகராட்சி பள்ளிகளுக்கு தலா 3 தூய்மை பணியாளர்கள், துப்புரவாளர்கள் என 12 தூய்மை பணியாளர்கள் தனியார் துப்புரவு பணி மூலம் நியமிக்க பார்வை (3)ல் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2022–23ஆம் ஆண்டு தினக்கூலி ரூ.478/– வீதம் 254 நாட்களுக்கு 14.57 இலட்சம் வீதம் மற்றும் மேற்பார்வையாளர்கள் ரூ.509/– வீதம் 254 நாட்களுக்கு 5.17 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு உத்தேச செலவினம் 59.22 இலட்சம் மற்றும் EPF+ESI+ நிர்வாக செலவினம் மற்றும் இதர அரசினால் அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கும் பள்ளி மாணவ மாணவியர் நலன் கருதி தூய்மை பணிகளை மேற்கொள்ளும் வகைக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட முதன்மை அனுமதி வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பிட அனுமதியும் மேற்படி பணிகளுக்குரிய உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1750/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–120**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/ஆர்1 நாள்.01.04.2022ல் தெரிவிக்கப்பட்ட உத்தரவுகளின்படி இந்நகராட்சியில் சொத்துவரி பொதுச் சீராய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022 மற்றும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.46 நாள்.24.05.2022ல் அனுமதி வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டு பொதுமக்களிடம் 13.04.2022 அன்று கருத்துக்கள் மற்றும் அட்சேபனைகள் கோரப்பட்டது. கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறாததால் மண்டல மதிப்பு இறுதி செய்யப்பட்டு தென்காசி மாவட்ட அரசிதழில் நாள்.20.06.2022 எண்.6ன்படி வெளியிடப்பட்டது.

மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியில் உள்ள அனைத்து வரிவிதிப்புகளுக்கு அந்தந்த பயன்பாட்டில் அடிப்படையிலும் மண்டல மதிப்புகள் அடிப்படையிலும் கணிணியில் கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது அவ்வாறு உயர்வு செய்யப்பட்ட சொத்துவரி மீது பொது மக்களுக்கு அறிவிப்பு கடிதம் ‘Special Notice’ வழங்கி 30 நாட்களுக்குள் ஆட்சேபனைகளை தெரிவிக்க மேற்கண்ட உத்தரவுகளில் கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியிலுள்ள காலிமனைவரி, குடியிருப்பு கட்டிடம், வணிகக்கட்டிடம், தொழிற்சாலைகள் மற்றும் பள்ளிக்கல்லூரி கட்டிடங்களுக்கான அறிவிப்புக் கடிதம் Special Notice 35000X2=70000 எண்ணம் நகல் எடுத்து வழங்க 14.07.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் முகவரி | விலைப்புள்ளி விகிதம் நகல் 1க்கு ரூ |
|---|---|---|
| 1. | கிளாசிக் ஆப்செட் அன்ட் கார்ட்ஸ்,<br>363, மெயின் பஜார்,<br>கடையநல்லூர் | ரூ.1.30/– |
| 2. | M.K.L.பிரிண்டர்ஸ்,<br>242 மெயின் பஜார் ரோடு,<br>கடையநல்லூர் | ரூ.1.60/– |

| | | |
|---|---|---|
| 3. | ரோஸ் பிரிண்டிங் பிரஸ்,<br>437, மெயின்ரோடு ,<br>கடையநல்லூர் | ரூ.1.75/– |

மேலும் மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள கிளாசிக் ஆப்செட் அன்ட் கார்ட்ஸ் கடையநல்லூர் கொடுத்துள்ள விலைப்புள்ளி ரூ.1.30/– என்பது குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட அச்சகத்தின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,10,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட அறிவிப்பு கடிதத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநரக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து உடனடியாக பொது மக்களுக்கு வழங்க வேண்டியதுள்ளதால் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 900/2022/அ1)**

**தீர்மானம் எண்:–121**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி குடிநீர் விநியோக மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பிரதான நீரேற்றும் குழாய்களில் உள்ள பழுதான வால்வுகளை புதிதாக தரமான வால்வுகளை வாங்கி பொருத்தும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி ரூ.1000000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் தகுதிப்பெற்ற முன் அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் 24.05.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு.K.S.அப்துல் மாலிக்,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | 0.07%<br>சதவீதம் குறைவு |
| 2. | திரு.P.M. அசன் முகம்மது,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர் | 1.26%<br>சதவீதம் அதிகம் |
| 3. | திரு.A.M. சேகனா,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர் | 0.13%<br>சதவீதம் அதிகம் |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்ததாரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.08/2022/இ1)**

**தீர்மானம் எண்:–122**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.7**

கல்லாற்றுப் படுகையில் உள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியில் இயங்கும் 15.00HP நீர்மூழ்கி மோட்டார் மற்றும் திறந்த வெளிக் கிணற்றில் உள்ள நீர் மூழ்கி மோட்டார் கேபிள்–2021 நவம்பர்

மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ள மோட்டாரினை பழுதுநீக்கம் செய்து பொருத்தும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் தகுதிப்பெற்ற பணிமனையாளர்களிடம் 18.03.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு.S.ஜேசுராஜ்<br>ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>182/1C ஹனிபா காம்ளக்ஸ் பண்பொழி ரோடு,<br>மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ.1,99,584/– |
| 2. | திரு.A. மருதப்பன்,<br>தினேஷ் குமரன் ரீவைண்டிங் ஒர்க்,<br>2/160, மெயின்ரோடு, சேர்ந்தமரம். | ரூ.2,01,600/– |
| 3. | திரு. விநாயகா ரீவைண்டிங் ஒர்க்,<br>5/63, தெற்கு தெரு,<br>வீரசிகாமணி | ரூ.2,03,840/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.ஜேசுராஜ் ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,182/1C ஹனிபா காம்ளக்ஸ் பண்பொழி ரோடு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர்.என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.78/2022/இ1)**

**தீர்மானம் எண்:–123**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் கடை எண்.1க்கு 01.04.2021 முதல் 31.03.2024வரை மூன்றாண்டுகளுக்கான குத்தகை உரிமத்திற்கு இவ்வலுவலக பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 02.02.2021ம் தேதிய அறிவிப்பின்படி திரு.A.மக்தூம், 164 சந்தை தெரு, பேட்டை என்பவர் மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்டு மாத வாடகையாக ரூ.7000/–க்கு உச்ச ஏலக் கேள்வி கேட்டுள்ளதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.11.02.2021ல் 01.04.21 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க இசைவு வழங்கப்பட்டது.

மேலும் ஏலம் கேட்கப்பட்ட தொகையில் ஒரு வருட வாடகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த தவறியதாலும் மேலும் தனியர் தனக்கு உடல் நிலை சரியில்லாததால் தொடர்ந்து கடையை நடத்த இயலவில்லை என்பதால் மேற்கண்ட கடைக்காக செலுத்தியுள்ள ஏலடெபாசிட் தொகை ரூ.100000/– திரும்ப வழங்க கோரியிருந்தார். அன்னாரது மனு பரிசீலிக்கப்பட்டு ஆறுமாத வாடகை தொகை ரூ.42000/– பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.58000/–ஐ அன்னாருக்கு தணிக்கை முடிவை பொறுத்து திரும்ப வழங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.496 நாள்.31.05.2021ல் அனுமதியளித்துள்ளது.

மேற்கண்ட தீர்மான நிறைவேற்றப்பட்டு ஆறுமாத காலத்திற்கு மேல் ஆவதால் திரு.மக்தூம் என்பவருக்கு ரூ.58000/– வழங்க மீண்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1463/2022/சி2)**

**தீர்மானம் எண்:–124**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி 2022–2025ம் ஆண்டு வார்டு 27 மேலக்கடையநல்லூர் தேரடி திடல் தெற்கு ரத வீதி கடைகள் ஒப்பந்தப்புள்ளி / ஏல அறிவிப்பு தென்காசி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி அவர்கள் வழியாக மாலைமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியலில் கண்டுள்ளவாறு **11088/–** மலர் பப்ளிகேஷன் லிமிடெட்க்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குத்தகை சார்பான விளம்பரக் கட்டணம் வழங்க நடவடிக்கை மேறகொள்ளப்பட்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1551/2021/சி2)**

**தீர்மானம் எண்:–125**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022–2023 திட்டத்தின் கீழ்,** இந்நகராட்சிப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டடுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப்பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்த கீழ்காணும் ஊரணியினை புனரமைப்பு செய்து மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.50.00/– இலட்சத்திற்கும், உரிய நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து தரக்கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கானாங்குளம் ஊரணி புனரமைப்பு செய்து மேம்படுத்துதல் பணி. (Ward: F, Block : 12, T.S.NO.36) | ரூ.50.00/– |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 826 /2022/இ1)**

**தீர்மானம் எண்:–126**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

தேசிய நகர்ப்புற சுகாதார குழுமம் (NUHM) 2021–2022ன் கீழ் கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் பகுதியில் நகர வார்டு ஜே பிளாக் 32 (பழைய புல எண்.634–ல் மொத்த ஹெக்டேர்ஸ் பரப்பினுள் 0.08.00 ஹெக்டேர்ஸ்) நிலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நெல்லை மாலை முரசு நாளிதழில் 3–வது பக்கத்தில்

15.06.2022 பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (வரிகள் உட்பட) ரூ.10710/–ஐ ‘‘நெல்லை முரசு (பி) லிட்’’ என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4789 /2021 /இ1)**

**தீர்மானம் எண்:–127**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் கிருஷ்ணாபுரம் மேற்கு மலம்பாட்டை தெரு, கதவு எண்.9ல் குடியிருந்துவரும் திருமதி.சிதம்பரத்தம்மாள் என்பவர் தனது வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கக்கோரி சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.14723/2022ன்படி வழக்கு தொடந்துள்ளார். அதில் பிரதிவாதியாக ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரை சேர்த்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.எம் இராஜராஜன், அரசு வழக்கறிஞரின் மூலம் எதிர்வாதிரை தாக்கல் செய்யப்பட்டுள்ளார். அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– (பத்தாயிரம் மட்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4789 /2021 /இ1)**

**தீர்மானம் எண்:–128**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கடையநல்லூர் நகராட்சியில் இரவுக்காவலராக பணிபுரிந்து வரும் திரு.கே.மாரிராஜா என்பவர் தனது மனைவி மற்றும் மருத்துவ பராமரிப்பில் இருந்து வரும் தனது வயது முதிர்ந்த தாயாரை உடனிருந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலை காரணமாக தன்னை சாத்தூர் நகராட்சியில் காலியாக உள்ள இரவுக்காவலர் பணியிடத்திற்கு பணியிடமாற்றம் வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். தனியரது குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு தனியரை சாத்தூர் நகராட்சிக்கு இரவுக்காவலராக பணியிடமாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1809 /2022 /சி1)**

**தீர்மானம் எண்:–129**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

30 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சுந்தரமகாலிங்கம் அவர்கள் நகராட்சியால் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் சாதாரண கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படி ரூ.600/–ஜீலை–2022 முதல் தனக்கு வழங்க வேண்டாம் எனவும், மேற்கண்ட தொகையினை நகராட்சி கணக்கில் வரவு வைத்துக்கொள்ளவும், தமது 20.07.2022ம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார்கள் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண். 1845 /2022 /அ1)**

**தீர்மானம் எண்:–130**

பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.15

தேசிய சுகாதார இயக்குநர் மற்றும் நிர்வாக செயலர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில், **தேசிய நகர்புற சுகாதார குழுமம் (NUHM) 2021–2022ன் கீழ்** மேலக்கடையநல்லூர் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுவதற்கு ரூ.75.00/–இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் (பொ), தென்காசி அவர்களின் செயல்முறை ஆணையில், நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு உரிய தொழில் நுட்ப அனுமதி வழங்க வேண்டி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப இந்நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், மேற்காணும் பணிக்கு தலைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், மேற்படி பணிக்கு 30.06.2022 அன்று இணையதள வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேலும் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | டேவணித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு. C.வேல்துரை, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 4.95% கூடுதல் | மதிப்பீட்டு விலை | ரூ.75000/– IOB BAZAR KDNR D.D.No.134023, நாள். 28.06.2022 ன் படி சமர்பித்துள்ளார். |
| 2. | திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 6.50% கூடுதல் | – | ரூ.75000/– IOB BAZAR KDNR D.D.No.134024, நாள். 28.06.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டை காட்டிலும் 4.95% கூடுதலாக திரு. C.வேல்துரை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இந்நிலையில் மேற்படி பணி அரசு திட்டப்பணியாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மதிப்பீட்டிற்குள்ளே வழங்க கேட்டு விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில், மேற்படி ஒப்பந்ததாரர் 22.07.2022 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலையில் பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளதால் திரு. C.வேல்துரை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.905/2021/இ1)**

**தீர்மானம் எண்:–131**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.16

கடையநல்லூர் நகராட்சி **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2022–2023ன்** கீழ் வார்டு எண்.13, பேட்டை, மலம்பாட்டை ரோடு மயானத்தில் (நகரளவை எண்.8/1, 8/2) நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் ரூ.147.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை நிலை (MS) எண்.88, நாள்.17.06.2022ன் படி நிர்வாக அனுமதியும்,

தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை தொழில்நுட்ப அனுமதி எண். /CE/2021– 2022, நாள். 27.06.2022ன் படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 15.07.2022ம் தேதி அன்று மாநில அளவிலான இணையதள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணுமாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. மேலும் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| | |
|---|---|
| 1. | GOOD CARE ENVIRO SYSTEM PVT. LTD.,<br>No.16, Lakshmi Nagar 12th Street,<br>Moulivakkam,<br>Chennai – 600 116. |
| 2. | NEPTUNE AUTOMATION<br>RSF.No.83/3, 84/1, A1,<br>Vaikkal Road, Pallipalayam,<br>Nasiyanur (P.O),<br>Erode – 638 107. |
| 3. | திரு. M.மாடசாமி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். |
| 4. | திரு. சி.வேல்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். |

மேற்காணும் நான்கு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.3–ல் காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே முன் அனுபவம் வாய்ந்த தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் என்பதால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்காணுமாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2022–2023ன்** கீழ் வார்டு எண்.13, பேட்டை, மலம்பாட்டை ரோடு மயானத்தில் (நகரளவை எண்.8/1, 8/2) நவீன எரிவாயு (LPG) தகனமேடை அமைக்கும் | 147.80 | திரு.M.மாடசாமி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | **4.00%**<br>கூடுதல் | **4.00%**<br>கூடுதல் |
| 2. | | | GOOD CARE ENVIRO SYSTEM PVT. LTD.,<br>No.16, Lakshmi Nagar 12th Street,<br>Moulivakkam,<br>Chennai –116. | **4.90%**<br>கூடுதல் | **0.10%**<br>குறைவு |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலான விலை விகிதத்தில் வரப்பெற்றதால், குறைந்த பட்ச விலை விகிதம் அளித்த L1 ஒப்பந்ததாரர் திரு.M.மாடசாமி, அவர்களிடம் விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டது. திரு.M.மாடசாமி, அவர்கள் ஏற்கனவே அளித்துள்ள மதிப்பீட்டை விட 4.00% கூடுதலான விலையினை விட குறைத்து செய்து தர இயலாது என தமது 18.07.2022ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதால், L2 ஒப்பந்ததாரர் M/S.GOOD CARE ENVIRO SYSTEM PVT. LTD, Chennai, நிறுவனத்திடம் விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக பணியினை செய்து தர 19.07.2022 ம் தேதிய கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளதால் M/S.GOOD CARE ENVIRO SYSTEM PVT. LTD, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 4458/2021/இ1)**

**தீர்மானம் எண்:–132**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.17

கடையநல்லூர் நகராட்சி – **அம்ருட் 2.O 2022–2023 திட்டத்தின் கீழ்** இந்நகராட்சிப் பகுதியில் உள்ள அட்டக்குளம் ஊரணியை புனரமைப்பு செய்து மேம்படுத்தும் பணியினை ரூ.61,51,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.108, நாள்.30.06.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், அரசாணை நிலை (MS) எண்.88, நாள்.17.06.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், மேற்காணும் பணிக்கு 15.072022 அன்று இணையதள வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேலும் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| வ. எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | டேவணித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | APM AND CO, 26/B6, MAIN ROAD, KRISHNAPURAM, KADAYANALLUR – 627 759 | 4.95% கூடுதல் | 0.10% குறைவு | ரூ.61510/–ஐ TMB, KDNR D.D.No.660182, நாள். 14.07.2022–ன் படி சமர்பித்துள்ளார். |
| 2. | திரு. M.சின்னதம்பி, 67ஏ, சம்பா தெரு, தென்காசி – 627 811. | 6.00% கூடுதல் | – | ரூ.61510/–ஐ HDFC Tenkasi D.D.No.004129, நாள். 14.07.2022–ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டை காட்டிலும் 4.95% கூடுதலாக APM AND CO, KRISHNAPURAM, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இந்நிலையில் மேற்படி பணி அரசு திட்டப்பணியாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மதிப்பீட்டிற்குள்ளே வழங்க கேட்டு விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில்,

மேற்படி ஒப்பந்ததாரர் 19.07.2022 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளதால் APM AND CO, KRISHNAPURAM, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.905/2021/இ1)**

**தீர்மானம் எண்:–133**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் வார்டு எண்.08 மற்றும் 09–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகேற்பவும், அந்த வார்டு பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்றும் கீழ்காணும் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| **வ. எண்** | **பணிகளின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | வார்டு எண்.09, வடக்குவாசெல்வியம்மன் கோவில் மேற்கு தெருவில் (சாலை குறியீட்டு எண். UNICODE 141009R102) பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | ரூ.7.00/– |
| 2. | 28.03.2022 அன்று நடைபெற்ற நகர்மன்றக் கூட்டத்தில் வருவாய் நிதியின் கீழ் 31 பணிகள் மேற்கொள்ள மன்றப்பொருள் வைக்கப்பெற்றது. அதில் வரிசை எண்.8, வார்டு எண்.08–ல் உள்ள வடக்கு விளை காலனித்தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.9.50/–இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. மேற்படி மன்றப்பொருளில் தெருவின் பெயரினை குறிப்பிடும் போது அப்பகுதி மக்கள் வழக்கு சொல்லாக பயன்படுத்தி வரும் வடக்கு விளை காலனித்தெரு என்று குறிப்பிடப்பட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளதால், இவ்வலுவலக சாலை பதிவேட்டின் படி உள்ள **காலனி விளை வடக்குத்தெரு (சாலை குறியீட்டு எண். UNICODE 141008R097 & UNICODE 141008R098)** என திருத்தம் செய்து மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. | ரூ.9.50/– |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி 19.07.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 682 /2022/இ1)**

**தீர்மானம் எண்:–134**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையத்தில் மேல்புறம் வணிக வளாக கட்டிடத்தின் தரைதளத்தில் அமைந்துள்ள கடை எண்.01–ஐ ஏலம் எடுத்தி நடத்தி வரும் திரு.முகம்மது மைதீன் த/பெ செய்யது அகமது என்பவர் மேற்படி கடையின் தென்புறம் உள்ள சுவற்றில் திறப்பு ஏற்படுத்தி தருமாறு கோரியுள்ளார். மேற்படி கடை எண்.1–ன் மேல்புறம் உள்ள காலியிடத்தில் இருசக்கர வாகனங்களை நிறுத்தம் செய்து போக்குவரத்திற்கு இடையூறு செய்வதால், மேற்படி கடை எண்.01–ற்கு தென்புறம் திறப்பு ஏற்படுத்துவதன் மூலம் இருசக்கர வாகனங்களை நிறுத்தி வைப்பதினை கட்டுப்படுத்தலாம் என்பதால் மேற்படி கடைக்கு திறப்பு ஏற்படுத்திட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அடிப்படை வாடகையை விட 5% கூடுதலாக நிர்ணயம் செய்திட அனுமதிக்கலாம்.
3. மாறுதலுக்கான செலவினங்களை ஏலதாரர் தனது சொந்த பொறுப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1587 /2022/இ1)**

**தீர்மானம் எண்:–135**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் வார்டு எண்.30 மற்றும் 32–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகேற்பவும், அந்த வார்டு பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்றும் கீழ்காணும் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.30, பண்பொழி சாலையில் அமைந்துள்ள கருமாரியம்மன் கோவில் எதிர்புறம் சிறு மின் விசை அமைப்புடன் நீரளிப்பு வசதிகள் செய்யும் பணி. | ரூ.2.50/– |
| 2. | வார்டு எண்.32, மலம்பாட்டை சாலையில் பொது உபயோகத்திற்கு நீரளிப்பு பணிகள் மற்றும் குளியலறைகள் (நீர்மலை அமைத்தல்). அமைக்கும் பணி | ரூ.10.00/– |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினங்களை நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 682 /2022/இ1)**

**தீர்மானம் எண்:–136**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கடையநல்லூர் நகராட்சி – குடிநீர் பிரிவில் இயங்கும் TN72 X8285 டேங்கர் வாகனத்தின் தகுதிச்சான்று பெறும் வகைக்கு பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகளை ரூ.55000/– உத்தேச மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் அனுமதி

வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் 25.03.2022 அன்று பதிவு பெற்ற அரசு பணிமனைதாரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>3/514, தென்காசி – செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம் –627805 | ரூ.54950/– |
| 2. | விநாயகர் மோட்டார்ஸ் ஒர்க்ஸ்,<br>31G, பாபநாசம் மெயின்ரோடு,<br>அம்பாசமுத்திரம் –627 401. | ரூ.59450/– |
| 3. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புது குடியிருப்பு,<br>நாகர்கோவில் –629 001. | ரூ.60800/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், 3/514 தென்காசி, செங்கோட்டை மெயின்ரோடு கொட்டாகுளம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக் கொண்டு TN72 X8285 டேங்கர் வாகனத்தின் தகுதிச்சான்று பெறும் வகைக்கு பழுதுகளை நீக்கம் செய்யப்பட்டதற்கு செலவீனத் தொகை ரூ.54950/–ம், தகுதிச்சான்று கட்டணம் செலுத்தியது ரூ.14965/–ம் ஆகமொத்தம் ரூ.69915/–ஐ வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.91/2020/இ1)**

**தீர்மானம் எண்:–137**

பதிவு செய்யப்பட்டது.

**33 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி.T.K.செய்யதலி பாத்திமா அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

கடையநல்லூர் நகராட்சி சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய நகராட்சி ஆகும். தற்போது இயங்கி வரும் இரண்டு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் (கிருஷ்ணாபுரம் மற்றும் மேலக்கடையநல்லூரிலும்) சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் (இக்பால் நகரிலிருந்து) இருப்பதால் இக்பால் நகர் (மொத்தம் 10 வார்டு பகுதி மக்களும்) பகுதி மக்கள் அவசர மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே எங்கள் பகுதியில் குசவன் குண்டு ஊரணிக்கு தென்புறம் உள்ள இடத்தில் புதிதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**தீர்மானம் வழிமொழிபவர்:** திருமதி.நிலோபர்
17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.

**தீர்மானம் எண்:–138**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**(ஒம்) M.A.ஹபீபுர் ரஹ்மான்,**
**நகர் மன்ற தலைவர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**